DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 1044/2025

Prosecution PW 5

Deposition of Witness for Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | வெங்கடேஷ் |
| Father's Name | : | கந்தசாமி |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |
| Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 16.03.2026.

**1 முதல் 3 எதிரிகள் நீதிமன்ற காவலிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டனர்.**

**முதல் விசாரணை**

நான் வாங்கப்பாளையத்தில் குடியிருந்து கொண்டு டெக்சில் வேலை செய்து வருகிறேன். தேதி மாதம் நினைவில்லை. சுமார் 1 வருடத்திற்கு முன்பு வேறொரு வேலையாக காவல் நிலையம் சென்றிருந்தபோது, எழுதாத வெள்ளைத்தாளில் போலிசார் கேட்டுக்கொண்டதற்கினங்க கையொப்பம் செய்து

கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் எதிரிகள் மூவரும் தனித்தனியாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலங்களிலுள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். **அவை முறையே அ.சா.ஆ. 4,5,6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் 3 கைப்பற்றுதல் மகசர்களிலுள்ள முதலாவது கையொப்பங்கள் என்னுடையதுதான். **அவை முறையே அ.சா.ஆ. 7,8,9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதிலுள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது. ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி குவிமுச பிரிவு 161க்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.**

**குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)**

போலீஸ் விசாரணையில் கடந்த 21.09.2025 அன்று பகல் 12.10 மணியளவில் நானும், நரேந்திரன் என்பவரும் அரசு காலனி பிரிவு அருகே சென்றுகொண்டிருந்தபோது, வெங்கமேடு காவல் ஆய்வாளர் எதிரிகள் சேனாதிபதி (எ) சூர்யா, ஸ்டைல் பாண்டி (எ) வினோத் குமார், கரடி (எ) மோகன்ராஜ் என்பவர்களை கைது செய்வதாகவும், அவர்களிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற இருப்பதாகவும், அதில் எங்களை சாட்சியாக இருக்க கேட்டுக்கொண்டதாகவும், அதன்படி என் முன்னிலையில் எதிரிகள் மூவரும் தன்னிச்சையாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தாகவும், அதில் நானும், நரேந்திரனும் கையொப்பம் செய்ததாகவும் அதன் அடிப்படையில் எதிரி சூர்யா ஆஜர்படுத்திய TN 47 S 8002 என்ற பதிவெண் கொண்ட TVS STAR SPORTS என்ற இருசக்கர வாகனத்தையும் அவர் பாக்கெட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்த சுமார் 1/4 பவுன் எடையுள்ள வைரக்கல் பதித்த டாலருடன் கூடிய தங்க செயினையும் எதிரி வினோத் குமார் என்பவர் சட்டைப் பாக்கெட்டிலிருந்து

எடுத்துக் கொடுத்த சுமார் 1 பவுன் எடையுள்ள தங்க செயினையும், எதிரி மோகன்ராஜ் என்பவர் சட்டைப் பாக்கெட்டிலிருந்து எடுத்து கொடுத்த சுமார் 1/4 பவுன் எடையுள்ள வைரக்கல் பதித்த 1 ஜோடி தங்க தோட்டை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியதாகவும், அதில் நான் சாட்சி கையொப்பம் செய்ததாகவும் கூறிவிட்டு தற்போது ஏதோ ஒரு ஆதாயத்திற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை ( எதிரி தரப்பில்)**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./-எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 1044/2025

Prosecution PW 6

Deposition of Witness for Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | நரேந்திரன் |
| Father's Name | : | சம்பத் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |
| Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 16.03.2026.

**1 முதல் 3 எதிரிகள் நீதிமன்ற காவலிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டனர்.**

**முதல் விசாரணை**

நான் வெண்ணைமலையில் குடியிருந்து கொண்டு எலெக்ட்ரிசியன் வேலை செய்து வருகிறேன். தேதி மாதம் நினைவில்லை. சுமார் 1 வருடத்திற்கு முன்பு வேறொரு வேலையாக காவல் நிலையம் சென்றிருந்தபோது, எழுதாத வெள்ளைத்தாளில் போலிசார் கேட்டுக்கொண்டதற்கினங்க கையொப்பம் செய்து

கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் எதிரிகள் மூவரும் தனித்தனியாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலங்களிலுள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். **அவை முறையே அ.சா.ஆ. 10,11,12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் 3 கைப்பற்றுதல் மகசர்களிலுள்ள இரண்டாவது கையொப்பங்கள் என்னுடையதுதான். **அவை முறையே அ.சா.ஆ. 13,14,15 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதிலுள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது. ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி குவிமுச பிரிவு 161க்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.**

**குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)**

போலீஸ் விசாரணையில் கடந்த 21.09.2025 அன்று பகல் 12.10 மணியளவில் நானும், வெங்கடேஷ் என்பவரும் அரசு காலனி பிரிவு அருகே சென்றுகொண்டிருந்தபோது, வெங்கமேடு காவல் ஆய்வாளர் எதிரிகள் சேனாதிபதி (எ) சூர்யா, ஸ்டைல் பாண்டி (எ) வினோத் குமார், கரடி (எ) மோகன்ராஜ் என்பவர்களை கைது செய்வதாகவும், அவர்களிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற இருப்பதாகவும், அதில் எங்களை சாட்சியாக இருக்க கேட்டுக்கொண்டதாகவும், அதன்படி என் முன்னிலையில் எதிரிகள் மூவரும் தன்னிச்சையாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தாகவும், அதில் நானும், நரேந்திரனும் கையொப்பம் செய்ததாகவும் அதன் அடிப்படையில் எதிரி சூர்யா ஆஜர்படுத்திய TN 47 S 8002 என்ற பதிவெண் கொண்ட TVS STAR SPORTS என்ற இருசக்கர வாகனத்தையும் அவர் பாக்கெட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்த சுமார் 1/4 பவுன் எடையுள்ள வைரக்கல் பதித்த டாலருடன் கூடிய தங்க செயினையும் எதிரி வினோத் குமார் என்பவர் சட்டைப் பாக்கெட்டிலிருந்து

எடுத்துக் கொடுத்த சுமார் 1 பவுன் எடையுள்ள தங்க செயினையும், எதிரி மோகன்ராஜ் என்பவர் சட்டைப் பாக்கெட்டிலிருந்து எடுத்து கொடுத்த சுமார் 1/4 பவுன் எடையுள்ள வைரக்கல் பதித்த 1 ஜோடி தங்க தோட்டை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியதாகவும், அதில் நான் சாட்சி கையொப்பம் செய்ததாகவும் கூறிவிட்டு தற்போது ஏதோ ஒரு ஆதாயத்திற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை ( எதிரி தரப்பில்)**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./-எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**